بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5 | இதழ் 47

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

3 ரபீவுஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி ★ 19 நுபுவ்வத் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி ★ 19 நவம்பர் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ لَا یَغۡفِرُ اَنۡ یُّشۡرَکَ بِہٖ وَیَغۡفِرُ
مَا دُوۡنَ ذٰلِکَ لِمَنۡ یَّشَآءُ ۚ وَمَنۡ
یُّشۡرِکۡ بِاللّٰہِ فَقَدۡ ضَلَّ ضَلٰلًۢا بَعِیۡدًا

(அந்நிஸா : 117)

அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இதை விடக் குறைந்ததை, தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு எதையாவது இணையாக ஆக்குகின்றவன் (நேரான பாதையிலிருந்து) வெகு தூரம் சென்று விட்டான் (எனப் புரிந்து கொள்ளுங்கள்).

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மறுமையை கவனத்திற் கொள்பவர்கள் எப்போதும் நற்பேறு பெற்றவர்களாவர். மனிதன் மறுமையை கவனத்திற் கொண்டு தீய செயல்களிலிருந்து பாவமன்னிப்பு தேடுவதே அவனுக்குக் கடமையாகும். ஏனெனில் உண்மையான மகிழ்ச்சியும் உண்மையான நிம்மதியும் இதிலேயே இருக்கிறது.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

துன்பங்களுக்கு மேலும் துன்பங்கள் வந்தபோதிலும், எல்லா புறமும் அபாயத்திற்கு மேல் அபாயம் தென்படும் நிலையிலும் மக்கள் இன்று வரை குறுகிய மனப்பான்மையையும், ஆணவத்தையும், கர்வத்தையும் கடைபிடிக்கிறார்கள் என்பதை நான் பார்க்கின்றேன். அறிவிலிகள் எதுவரை இந்தக் கவலையற்ற நிலையில் வாழ்வார்கள்? மக்கள் பிடிவாதத்தை எப்போது வரை விடமாட்டார்கள்? தீய செயல்களிலிருந்து விலகுவதில்லை. இறைவனுடன் கால சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்வதில்லை. இந்த சோதனைகளும், துன்பங்களும் விலகப் போவதில்லை. பஞ்ச நாட்களில் மக்கள் கொஞ்சமும் பஞ்சத்தின் துன்பத்தை உணரவில்லை என நான் பார்த்தேன். நன்றாகச் சிந்தித்தேன். பஞ்ச காலத்தில் மதுக்கடைகள் எந்த அளவுக்கு நிரம்பி வழிந்தன! தீமைகள், தீய ஒழுக்கங்க கெட்ட செயல்கள் சூடுபிடித்திருந்தன!! ஆரம்பத்தில் மக்கா, மதீனாவின் பெயரால் மார்க்கத் தீர்ப்பாக ஒன்று வந்து விட்டால் மக்கள் மிகவும் அஞ்சினார்கள். பள்ளிவாயில்கள் நிரம்பின. ஆனால் இப்போது அகங்காரமும், அட்டூழியமும் எல்லை மீறி விட்டன. அல்லாஹ்வே அருள் புரிவானாக.

இறை தண்டனை வருவதற்கு முன்னர் அதைப் பற்றி கவலைப்படுபவர்தான் அறிவாளி ஆவார். துன்பம் வருவதற்கு முன்னர் அதிலிருந்து தப்பிப்பதற்கு கவலைப்படுபவர்தான் தொலைநோக்குப் பார்வையுடையவர் ஆவார்.

மனிதன் மறுமையைக் கவனத்திற் கொண்டு தீய செயல்களிலிருந்து பாவமன்னிப்புத் தேடுவதே அவனுக்குக் கடமையாகும். ஏனெனில் உண்மையான மகிழ்ச்சியும் உண்மையான நிம்மதியும் அதிலேயே இருக்கின்றது. எந்த தீய செயலைச் செய்பவரும், பாவியின் செயலும் ஒரு நொடிப்பொழுது கூட உண்மையான மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. தீய நடத்தை உள்ளவருக்கும், நடத்தை கெட்டவருக்கும் ஒவ்வொரு வினாடியும் இரகசியம் வெளிப்பட்டு விடும் அபாயம் தொற்றிக் கொண்டிருக்கிறது. மறுமையைக் கவனத்தில் கொள்பவர்கள் எப்போதும் நற்பேறு பெற்றவர்களாவர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 221, 222 காதியான் பதிப்பு 2018)

## நபிமொழிகள்

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சிறந்த துஆ

ஹஸ்ரத் முகீரா (ரலி) பின் ஷுஃபா அவர்களுக்கு எழுதிக் கொடுப்பவராகிய வர்ராத் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் முகீரா (ரலி) பின் ஷுஃபா அவர்கள் என்னிடமிருந்து ஹஸ்ரத் முஆவிய்யா (ரலி) அவர்களுக்காக ஒரு கடிதத்தை எழுத வைத்தார்கள். அதில் நபி கரீம் (ஸல்) அவர்கள் கடமையான தொழுகைக்குப் பிறகு இவ்வாறு கூறி வந்தார்கள்.

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَحۡدَہٗ لَا شَرِیۡکَ لَہٗ لَہٗ
الۡمُلۡکُ وَلَہُ الۡحَمۡدُ وَھُوَ عَلٰی کُلِّ شَیۡءٍ
قَدِیۡرٌ اَللّٰھُمَّ لَا مَانِعَ لِمَا اَعۡطَیۡتَ وَلَا
مُعۡطِیَ لِمَا مَنَعۡتَ وَلَا یَنۡفَعُ ذَا الۡجَدِّ مِنۡکَ الۡجَدُّ

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவன் ஒருவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது. அவனுக்கே எல்லாப் புகழும். அவன் எல்லாவற்றின் மீதும் பெரும் ஆற்றல் கொண்டவன். அல்லாஹ்வே! நீ கொடுப்பவருக்கு யாரும் தடை செய்ய முடியாது. நீ தடை செய்பவருக்கு யாரும் கொடுக்க முடியாது. எந்தத் தகுதி உடையவரும் உனது தகுதிக்கு முன்னால் ஒன்றும் இல்லை.

(சஹீஹ் புகாரி. கிதாபுல் அதான் தொகுதி 2 காதியான் பதிப்பு 2006)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இன்று திருக்குர்ஆனின் எத்தனை காப்பிகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களின் கிராஅத்திற்கு ஏற்பவே உள்ளன.**

**என் சகோதரரே! முஸ்லிம்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் அல்லாஹ்வின் ஒரு மகத்தான அமானத் ஆவார். அந்த அமானத்தை எப்போதும் காப்பாற்றி வர வேண்டும் என எனது சமுதாயத்திற்கும், என் குடும்பத்தாரிடமும் கூறுங்கள்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்ட நபித்தோழரும், பத்ர் போரில் ஷஹாதத்தை பெற்றவருமாகிய ஹஸ்ரத் முஅவ்விஸ் பின் ஹாரிஸ் மற்றும் வஹியை எழுதுபவரும் முஸ்லிம்களின் தலைவரும் உம்மத்தில் மிகப்பெரிய காரீயுமான ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகள் பற்றிய குறிப்புகள்.**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 அக்டோபர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இகா** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ -
إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ - اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ -
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

இன்று **முஅவ்விஸ் பின் ஹாரிஸ்** என்ற பெயருடைய ஒரு சஹாபியைப் பற்றி கூறுவேன். ஹஸ்ரத் முஅவ்விஸ் பின் ஹாரிஸ் அன்ஸார் சகோதரர்களுடைய கஸ்ரஜ் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் முஅவ்விஸ் உடைய தந்தையார் பெயர் ஹாரிஸ் பின் ரிஃபா ஆகும். அவரது தாயார் பெயர் அஃப்ரா பின்த் உபைத் ஆகும். ஹஸ்ரத் முஆஸ், ஹஸ்ரத் அவ்ஸ் ஆகியோர் இவரது சகோதரர்களாவர். இந்த மூன்று பேரும் தந்தையாருடன் சேர்த்து தாயார் பெயருடன் சுட்டிக் காட்டப்பட்டனர். இந்த மூவரையும் பனூ அஃப்ரா என்றும் கூறப்பட்டது. (அஸதுல் காபா ஃபி மஃரிஃபத்திஸ் ஸஹாபா தொகுதி 5 பக்கம் 231. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி) தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2003. அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 374. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி) தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 1990) இப்னு இஸ்ஹாக் மட்டுமே அறிவித்துள்ள ஒரு செய்தி ஹஸ்ரத் முஅவ்விஸ் 70 அன்ஸார் சகோதரர்களுடன் இரண்டாவது உக்பாவில் கலந்து கொண்டவர் என்பதாகும். ஹஸ்ரத் முஅவ்விஸ், உம்மே யசீது பின்த் கைஸ் என்பவரை திருமணம் முடிந்திருந்தார். இந்த திருமணத்தின் மூலம் அவருக்கு இரண்டு மகள்கள் பிறந்திருந்தனர். அவர்களின் பெயர் ருபய்யிஃ பின்த் முஅவ்விஸ் மற்றும் உமைரா பின்த் முஅவ்விஸ் ஆகும். (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 374. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி) தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 1990) ஹஸ்ரத் முஅவ்விஸ் அவர்களுக்கு அவரது இரண்டு சகோதரர்கள் ஹஸ்ரத் முஆஸ் மற்றும் ஹஸ்ரத் அவ்ஸ் உடன் சேர்ந்து பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. (அஸதுல் காபா ஃபி மஃரிஃபத்திஸ் ஸஹாபா தொகுதி 5 பக்கம் 231. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி) தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2003) பத்ர் போரில் ஹஸ்ரத் முஆஸ், ஹஸ்ரத் அவ்ஸ், ஹஸ்ரத் முஅவ்விஸ் ஆகிய இப்னு அஃப்ரா என்றழைக்கப்பட்ட இவர்கள் மற்றும் இவர்களது சுதந்திரம் விடப்பட்ட அடிமை அபுல் ஹம்ரா ஆகிய அனைவருக்கும் சேர்த்து ஒரேயோர் ஒட்டகம்தான் இருந்தது. அவர்கள் அனைவரும் அதில் ஒருவர் மாற்றி ஒருவர் பயணம் செய்தனர். (கிதாபுல் மகாஸீ லில்வாகதீ தொகுதி 1 பக்கம் 38. பத்ருல் கிரால். தாருல் குதுபுல் இல்மிய்யா 2003. ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டது) ஹஸ்ரத் முஅவ்விஸ் குறித்த அறிவிப்பில் இதனை முன்னர் கூறியுள்ளேன். இப்போது முஅவ்விஸ் பற்றியும் இதனை கூறுவது அவசியமாக இருந்ததால் விளக்குகிறேன்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் நடக்கும்போது கூறினார்கள்: அபூஜஹில் நிலைமை என்னவென்று எவர் பார்த்து வருவார்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் இப்னு மஸ்வூது சென்று பார்த்தார். அவனை அஃப்ராவுடைய இரண்டு மகன்கள் எவ்வளவு வெட்டி விட்டார்கள் என்றால் அவன் மரணத்தை நெருங்கி விட்டான். ஹஸ்ரத் இப்னு மஸ்வூது, 'நீர் அபுஜஹில்தானே!' என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவனுடைய தாடியைப் பிடித்தார்கள். அபூஜஹில், 'என்னை விட பெரிய மனிதர் எவரையாவது கொன்றிருக்கிறீர்களா? அல்லது உமது சமுதாயம் கொன்று இருக்கிறதா?' என்று கேட்டான்.

(சஹீஹ் புகாரி. அத்தியாயம் நபிகளார் காலத்துப் போர்கள் ஹதீஸ் எண் 3962)

இதன் விளக்கவுரையில் ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் கூறுகிறார்கள்: இது புகாரியின் அறிவிப்பாகும். சில அறிவிப்புகளில் அப்ராவின் இரு மகன்கள் முஹப்பிஸ் மற்றும் மஆஸ் இருவரும் சேர்ந்து அபூஜஹிலை மரணத்திற்கு மிக அருகில் கொண்டு சென்றனர். பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவனது தலையை உடலிலிருந்து தனியாக வெட்டி எடுத்தார்கள் என்று வருகிறது. இமாம் இப்னு ஹஜ்ர், ஹஸ்ரத் முஆஸ் பின் அம்ர், ஹஸ்ரத் முஆஸ் பின் அஃப்ரா (ரலி) அவர்களுக்குப் பிறகு முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி) அவர்களும் அவனைத் தாக்கி இருக்கலாம் என்று கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 3141)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அபூஜஹில் உடைய கொலை சம்பவத்தை விளக்கும்போது கூறியுள்ளார்கள்: மனிதன் பெரும் மகிழ்ச்சி அடைகிறான். தனக்கு இது மிகவும் பயனுள்ளது என்று நினைக்கிறான். ஆனால் அதுவே அவனது அழிவுக்குக் காரணமாக அமைகின்றது. பத்ர் போரின்போது மக்கத்து நிராகரிப்பாளர்கள் வரும்போது அவர்கள், தாம் முஸ்லிம்களை அழித்து விட்டதாகக் கருதினர். அபூஜஹில், நாம் பெருநாள் கொண்டாடுவோம்; நிறைய மது அருந்துவோம்; முஸ்லிம்களை அடித்தே விரட்டி விடுவோம் என்று கருதினான். ஆனால் அதே அபூஜஹிலை மதீனாவின் இரு சிறுவர்கள் கொன்று விட்டனர். மக்கத்து நிராகரிப்பாளர்கள் மதீனாவாசிகளை மிகவும் இழிவாகக் கருதி வந்தனர். அபூஜஹிலுக்கு எத்தகைய ஒரு இழிவை ஏற்க வாய்ப்பு ஏற்பட்டது என்றால் அவனது இறுதி விருப்பம் கூட நிறைவேறவில்லை. அரபு மக்களின் வழக்கம் ஒருவர் போரில் கொல்லப்பட்டால் தமது கழுத்தை சற்று நீளமாக இருக்குமாறு வெட்ட வேண்டும் என்று விரும்புவர். இதன் மூலம் தாம் ஒரு தலைவராக இருந்தவர் என்று அறியப்பட விரும்பினர். அப்துல்லாஹ் பின் மஸ்வூது, அவன் பெரும் காயமுற்றிருந்த நிலையிலும் வீணான எண்ணத்தில் இருக்கிறான் என்பதை பார்த்தார்கள். அபூஜஹில், 'எனக்கு இதனை தவிர வேறு ஆதங்கம் இல்லை. என்னை மதீனாவின் இரண்டு சிறுவர்கள் கொன்று விட்டார்கள். அதுவும் சாதாரண விவசாயியின் மகன்கள்' என்று கூறினான். மதீனா மக்களுக்கு போர்

பற்றியெல்லாம் என்ன தெரியும் என்றும், ஒன்றும் அறியாதவர்கள் என்றும் கருதப்பட்டு வந்தது. ஆனால் அவர்களது இந்த பெருமையை உடைத்தது அதே மக்கள்தான். இன்னும் சொல்வதாயின், அவர்களின் சிறுவர்கள் செய்தனர். சிறுவர்கள் அனுபவசாலிகள் அல்ல. அப்துல்லாஹ் பின் மஸ்வூது அபூஜஹிலிடம், 'உங்களுக்கு ஏதாவது விருப்பம் என்று உண்டா?' என்று கேட்டார்கள். அதற்கு அவன், 'எனது தலையை சற்று நீளமாக வெட்ட வேண்டும்' என்றான். 'உனது அந்த ஆசையை நிறைவேற விடமாட்டேன்' என்று அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறினார்கள். பிறகு அவனது தலையை சற்று சிறியதாக இருக்குமாறு வெட்டி விட்டார்கள். அவனோ பெருநாள் கொண்டாட நினைத்தான். அவனுக்கே அது இரங்கலாக ஆகி விட்டது. அவன் குடித்த மதுவும் கூட ஜீரணமாக வாய்ப்பு கிடைக்கவில்லை. (குத்பாத்தே மஹ்மூது பொருள் குத்பா பேருரை தொகுப்பு 1 பக்கம் 11) பத்ர் போரின்போது ஹஸ்ரத் முஅவ்விஸ் போரிட்டவாறே ஷஹீதாகி விட்டார்கள். அவரை முஸாபிஹ் ஷஹீதாக்கினான்.

(அல் இஸ்தீஆப் ஃபி மஃரிஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 1442. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் ஜீல் பைரூத் 1902)

அடுத்த சஹாபி **உபை பின் கஅப்** என்பவர் ஆவார். ஹஸ்ரத் உபை அன்ஸார்களுடைய கஸ்ரஜ் உடைய பனூ முஆவியா கிளையைச் சார்ந்தவர். ஹஸ்ரத் உபை உடைய தந்தையார் பெயர் கஅப் பின் கைஸ். தாயார் பெயர் சுஹைலா பின்த் அஸ்வத். ஹஸ்ரத் உபை பின் கஅப்புக்கு இரு சுட்டுப் பெயர்கள் இருந்தன. ஒன்று அபூ முன்ஸிர். இந்தப் பெயரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூட்டினார்கள். அடுத்து அபூ துஃபைல். இந்தப் பெயரை ஹஸ்ரத் உமர் அவர்கள் உபை உடைய மகனை அடிப்படையாகக் கொண்டு வைத்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 168–169. தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2016)

ஹஸ்ரத் உபை நடுத்தரமான உயரமுடையவர். ஹஸ்ரத் உபை (ரலி) உடைய தலை மற்றும் தாடி வெள்ளையாக இருந்தது. அவர்கள் வயோதிகம் காரணமாக அதனை மாற்ற விரும்பவில்லை. (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) தலைக்கோ தாடிக்கோ கருப்பு சாயம் பூசியிருக்கவில்லை. ஹஸ்ரத் உபை பின் கஅப் 70 பேருடன் இரண்டாவது பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டவர். ஹஸ்ரத் உபை இஸ்லாத்திற்கு முன்னரே எழுதப் படிக்க அறிந்திருந்தார்கள். இஸ்லாத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உபைக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கும் வசனங்களை எழுதும் வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபை மற்றும் தல்ஹா பின் உபைதுல்லாஹ் இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தி இருந்தார்கள். இரண்டாவது அறிவிப்பின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபை மற்றும் ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தி இருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017)

ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) பற்றி வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன், 'ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களை திருக்குர்ஆன் ஓதச் சொல்லி கேட்பீராக' என்று கட்டளையிட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த உம்மத்தில் எல்லாரையும் விட பெரிய காரி (திருக்குர்ஆன் ஓதுபவர்) உபை ஆவார். (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) அவரைப் பற்றி வருகிறது. அவருக்கு திருக்குர்ஆனின் நிறைய ஞானம் இருந்தது. இதுபற்றி பின்னாலும் நிறைய அறிவிப்புகள் வருகின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் குரஆயே உம்மத் என்று கூறப்பட்ட நான்கு பேரில் ஒருவர் ஆவார். ஒருவர் திருக்குர்ஆன் ஓதக் கற்க வேண்டும் எனில் அவரிடம் கற்க வேண்டும். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 84)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை எழுத வைத்தவர்களில் கீழ்க்கண்ட 16 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

1) ஸைத் பின் ஸாபித் 2) உபை பின் கஅப் 3) அப்துல்லாஹ் பின் சஅத் 4) அபி சராஹ் 5) சுபைர் பின் அல் அவ்வான் 6) காலித் பின் சயீத் பின் ஆஸ் 7) அவான் பின் சயீத் அல் ஆஸ் 8) கஸைலா அர்ரபிஇ அல் அஸதி 9) முகைய்யிப் பின் அபி ஃபாத்திமா 10) அப்துல்லாஹ் பின் அர்கம் சஹரி 11) சர்ஜுல் பின் ஹஸனா 12) அப்துல்லாஹ் பின் ரவாஹா 13) ஹஸ்ரத் அபூபக்ர் 14) ஹஸ்ரத் உமர் 15) ஹஸ்ரத் உஸ்மான் 16) ஹஸ்ரத் அலி.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் இறங்கும்போது அன்னார் இவர்களுள் எவரையாவது அழைத்து எழுதி வைத்துக் கொள்வார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன். அன்வாருல் உலூம் தொகுப்பு 20 பக்கம் 425–426)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதித் தருபவர்களின் குழுவை நியமித்தார்கள். அவர்கள் முழு குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து மனனம் செய்து மக்களிடம் கொண்டு சேர்த்து ஓதச் செய்வர். இதில் சிகரத்தில் இருந்தது நான்கு ஆசிரியர்கள். அவர்களின் பணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் குர்ஆனை ஓதப் பயின்று மற்ற மக்களுக்கு ஓதித் தர வேண்டும். பிறகு இவர்களின் கீழ் நிறைய சஹாபாக்கள் இருந்தனர். அவர்கள் மக்களுக்கு திருக்குர்ஆன் ஓதித் தந்தார்கள். அந்த நான்கு பேராசிரியர்களின் பெயர் இவையாகும். அப்துல்லாஹ் பின் மஸ்வூது, சாலிம் மவ்லா அபி ஹுதைபா, முஆஸ் பின் ஜபல், உபை இப்னு கஅப் ஆவர். இவர்களுள் முன்னுள்ள இருவர் முஹாஜிர். பின்னுள்ள இருவர் அன்ஸார் ஆவர். வேலையைப் பொருத்தவரை அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூலி வேலை செய்தார். சாலிம் விடுதலை விடப்பட்ட அடிமை, முஆஸ் பின் ஜபல், உபை பின் கஅப் ஆகியோர் மதீனாவின் தலைவர்களுள் உள்ளவர்களாக இருந்தனர். எனவே எல்லா தரப்பினரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனதில் கொண்டவாறு காரிகளை நியமித்திருந்தார்கள்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குஸூல் குர்ஆன மின் அரபஅதின் அப்துல்லாஹ் பின் மஸ்வூத், சாலிம், முஆஸ் பின் ஜபல், உபை பின் கஅப் என்று கூறி வந்தார்கள்.

எவராவது திருக்குர்ஆன் ஓத விரும்பினால் இந்த நால்வரிடம் திருக்குர்ஆனை ஓதக் கற்றுக் கொள்ளவும். அப்துல்லாஹ் பின் மஸ்வூத், சாலிம், முஆஸ் பின் ஜபல், உபை பின் கஅப். இந்த நால்வரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் முழு குர்ஆனை ஓதக் கற்றவர்களும், அன்னாரிடம் ஓதிக் காண்பித்து தம்மை சரிப்படுத்திக் கொண்டவர்களும் ஆவர். ஆனால் இவர்கள் அல்லாமலும் நிறைய சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நேரடியாகவும் சிறிது குர்ஆன் ஓதக் கற்றுவந்தார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன். அன்வாருல் உலூம் தொகுப்பு 20 பக்கம் 427–428)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு கட்டளையிட்டான். லம் யகுனுல்லதீன கஃபரு சூராவை உம்மை ஓதச் செய்து கேட்குமாறு கூறினான். ஹஸ்ரத் உபை, 'எனது பெயரை கூறினானா?' என்று கேட்டார். அதற்கு அன்னார் 'ஆம்' என்றார்கள். உபை அதனைக் கேட்டு அழத் தொடங்கினார். இது புகாரியின் அறிவிப்பாகும். (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 3809)

அதே வேளையில் இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபை பின் கஅப் அவர்களிடம் கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு, நான் உம்மிடம் குர்ஆன் ஓதச் சொல்லி கேட்க வேண்டுமாம் என்று கட்டளையிட்டான். ஹஸ்ரத் உபை, அல்லாஹ் எனது

பெயரைக் கூறினானா? என்று கேட்டார். அதற்கு அன்னார், 'ஆம்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உபை, இரு உலகையும் பராமரிப்பவனால் என்னைப் பற்றி கூறப்பட்டதா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'ஆம்' என்றார்கள். இதனைக் கேட்டு உபை கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 4961)

இந்தச் சம்பவம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) தனது வார்த்தைகளில் இவ்வாறு கூறுகிறார்கள்: அபூ ஹைய்யா பதிரி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. லம் யகுனுல்லஸீ என்ற சூரா இறங்கியபோது, அந்த சூரா முழுமையாக இறங்கியபோது, ஹஸ்ரத் ஜிப்ரயீல், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். இந்த சூராவை உபை இப்னு கஅபுக்கு மனனம் செய்ய வையுங்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபை இப்னு கஅபிடம், 'ஜிப்ரயீல் இறைவனது கட்டளையை என்னிடம் கொண்டு சேர்த்துள்ளார். நான் உமக்கு இந்த சூராவை மனனம் செய்ய வைக்க வேண்டுமாம்' என்று கட்டளையிட்டுள்ளான். ஹஸ்ரத் உபை பின் கஅப், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இறைவனுடைய சன்னிதானத்தில் என்னைப் பற்றி கூறப்பட்டதா?' என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'ஆம்' என்று கூறினார்கள். உடனே உபை பின் கஅப் மகிழ்ச்சியால் அழுதார். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 342)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமரே ஃபாரூக் அவர்கள் இந்த வாக்கியத்தின் நினைவை பலமுறை புதுப்பித்தார்கள். ஒருமுறை மஸ்ஜிதுன் நபவியின் சொற்பொழிவு மேடையில் நின்று கூறினார்கள்: மிகப் பெரிய காரி உபை ஆவார். சிரியாவுக்கு பயணம் சென்ற பிரபல பயணத்தில் ஜாபியா என்ற திமிஷ்கின் ஒரு பகுதியில் குத்பா தரும்போது கூறினார்கள். மன் அராத அல் குர்ஆன வல் பஅதி உபைய்யா – எவருக்கு திருக்குர்ஆன் கற்கும் ஆர்வம் உள்ளதோ அவர் உபை இடம் வரவும்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 149. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார் கராச்சி, முஃஜமுல் பலதான் தொகுதி 2 பக்கம் 92)

ஹஸ்ரத் அனஸ் அவர்களின் அறிவிப்பு. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்தவர் அனைவரும் அன்ஸாரிகளாக இருந்தனர். உபை இப்னு கஅப், ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் அபூ ஸைத், ஹஸ்ரத் சைத் பின் சாபித்.

இது புகாரியின் ஹதீஸ் ஆகும். (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 3810) ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்ஸார் உடைய பிரபல ஹாஃபிஸ்களின் பெயர்கள் இவையாகும். உபாதா பின் ஸாமித், மஆஸ் முஜம்மி, ஹாரிஸா, பஸாலா பின் உபைத், மஸ்லமா பின் முகல்லல், அபூதர்தா, அபூ ஸைத், ஸைத் பின் சாபித், உபை பின் கஅப், சஅத் பின் உபாதா மற்றும் உம்மே வரக்கா.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன். அன்வாருல் உலூம் தொகுப்பு 20 பக்கம் 430)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் மிகப்பெரும் கருணை உள்ளவர் ஹஸ்ரத் அபூபக்கர் ஆவார்.

இறைவனுடைய மார்க்கத்திற்காக மிகவும் கடுமை காட்டுபவர் ஹஸ்ரத் உமர் ஆவார்கள். அவர்களிடம் விதிமுறையைப் பேணுவதில் கடும் கண்டிப்பு இருந்தது. வெட்கத்தில் பெரும் முழுமை பெற்றவர் ஹஸ்ரத் உஸ்மான் ஆவார்கள். ஆகுமானவை ஆகாதவை குறித்து அதிகமான அறிவு கொண்டவர் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் ஆவார்கள். கடமைகளைப் பற்றி எல்லாரையும் விட மிகவும் அறிந்தவர் ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் ஆவார்கள். கிராஅத்தை எல்லாரையும் விட அதிகமாக அறிந்தவர் ஹஸ்ரத் உபை பின் கஅப் ஆவார்கள். ஒவ்வொரு உம்மத்திற்கும் ஓர் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) இருக்கிறார். இந்த உம்மத்தின் அமீன் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆவார்கள். (ஜாமிஅ திர்மிதீ ஹதீஸ் எண் 3790) அபூ உபைதாவைப் பற்றி முன்னர் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது எல்லாரையும் விட முதலில் வஹியை எழுத நியமிக்கப்பட்டவர் உபை பின் கஅப் ஆவார்கள். அக்காலத்தில் எழுதும்போது எழுத்தாளர் தமது பெயரை எழுதும் வழக்கம் இருக்கவில்லை. எல்லாருக்கும் முதலில் ஹஸ்ரத் உபை பின் கஅப் அந்த வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். பின்னால் மற்ற பெரியவர்களும் அதனைப் பின்பற்றினார்கள். (அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 170. தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2016. சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 158. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி) எழுதியவரின் பெயர் எழுதப்பட்டது. ஹஸ்ரத் உபை இப்பணியை தொடங்கி வைத்தார்கள். பிறகு வந்தவர்களும் இப்பகுதியை நாங்கள் எழுதினோம் என்று எழுதி வைத்தனர். இவ்வாறு பிற்காலத்தில் இவ்வழக்கம் தொடர்ந்தது. ஹஸ்ரத் உபை திருக்குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனதில் இருந்து கேட்டு எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது ஆர்வத்தைப் பார்த்து அவரது கல்வியின் மீது சிறப்பான கவனம் செலுத்தினார்கள்.

நுபுவ்வத்தின் மீதுள்ள பயம் பெரிய பெரிய சஹாபிகளை கேள்வி கேட்பதிலிருந்து தடுத்து வைத்திருந்தது. ஆனால் ஹஸ்ரத் உபை கேட்க விரும்பியதை உடனே கேட்டு வருபவராக இருந்தார். அவரது ஆர்வத்தைப் பார்த்து, அதாவது தேவையில்லாமல் கேள்வி கேட்பார் என்பதன்று. நுபுவ்வத்தின் மகத்துவத்திற்கு உட்பட்டவாறு எவ்வாறு கேள்வி கேட்க வேண்டுமோ அவ்வாறு கேள்வி கேட்டார்கள். அவ்வாறு கேட்பதில் எந்தவொரு கூச்சமும் இருந்ததில்லை. அவரது ஆர்வத்தைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே முன் வந்து கேள்வி கேட்கவும் செய்வார்கள். அவர்களிடம் இருந்து கேள்வி வராமலும் தாம் விளக்கவும் செய்தார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 148. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகை நடத்தினார்கள். ஒரு வசனம் ஓத மறந்து விட்டார்கள். ஹஸ்ரத் உபை தொழுகையில் தொடக்கத்திலேயே சேரவும் இல்லை. நடுவில் வந்து சேர்ந்தார்கள். தொழுகை முடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடம், எவராவது எனது கிராஅத்தை கவனித்தீர்களா? என்று கேட்டார்கள். அனைவரும் அமைதியாக இருந்தனர். உபை பின் கஅப் அப்போது தமது தொழுகையை முடித்திருந்தார்கள். இரண்டாவது ரக்அத்தில் தவறு நடந்ததுபோலும். அன்னார் ஒரு வசனத்தை மறந்திருப்பார்கள் போலும். உபை இப்னு கஅப் தாமதமாக சேர்ந்தாலும் அதனை கவனித்து இருந்தார்கள் போலும். உபை தமது தொழுகையை முடித்ததும், 'தாங்கள் இன்ன வசனம் ஓதவில்லை' என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இன்ன வசனம் ஓதவில்லை. அந்த வசனம் மாற்றப்பட்டு விட்டதா? அல்லது ஓத மறந்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அன்னார், 'இல்லை; நான் ஓத மறந்து விட்டேன்' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உபையைப் பார்த்து, நான் அறிவேன். உம்மைத் தவிர வேறு எவருக்கும் இது குறித்து கவனம் திரும்பாது என்று அறிந்திருந்தேன் என்று கூறினார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 148. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் உபை இப்னு கஅப் கூறினார்கள்: நான் பள்ளிவாயிலில் இருந்தேன். ஒரு மனிதர் உள்ளே வந்தார். தொழத் தொடங்கினார். அவர் ஓதிய கிராஅத் எனக்கு அன்னியமாக இருந்தது. பிறகு இன்னொருவர்


**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி
இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட
அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ்
இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக
ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, *Melapalayam*

வந்து ஓதினார். அவரது கிராஅத் வேறு மாதிரி இருந்தது. பிறகு நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் முன் வந்து கேட்டேன். ஒருவர் இவ்வாறு குர்ஆன் கிராஅத் ஓதினார். எனக்கு அது வினோதமாகத் தெரிந்தது. பிறகு இன்னொருவர் வந்து தன்னுடன் இருந்தவரின் கிராஅத்தை விடுத்து வேறொரு கிராஅத்தில் ஓதினார் என்றார். அன்னார் அந்த இருவரிடமும் கூறினார்கள். இந்த இருவரையும் ஓதச் சொல்லி கேட்டார். இருவரும் ஓதிக் காட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதியதை சரியானது என்று கூறினார்கள். இருவர் ஓதியதும் சரிதான் என்றார்கள். நான் அவர்கள் தவறாக ஓதியதாகக் கருதியிருந்தேன் என்று ஹஸ்ரத் உபை கூறுகிறார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), அவர்கள் எனது அந்த எண்ணத்தை மாற்றி விட்டார்கள். அந்த இருவர் ஓதியதும் சரிதான் என்று கூறி விட்டார்கள். இதனால் நான் மிகவும் வெட்கமடைந்தேன். அறியாமைக் காலத்தில் கூட இது நடக்கவில்லை. வாழ்வில் எப்போதும் ஏற்படாத வெட்கம் அப்போது ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது நிலையைப் பார்த்து எனது முகத்தில் தென்பட்ட வெட்கத்தைப் பார்த்து எனது நெஞ்சில் கையை வைத்தார்கள். நான் வியர்வை சொட்ட நின்றிருந்தேன். நான் பயத்துடன் கம்பீரமும் கண்ணியமும் பொருந்திய அல்லாஹ்வைப் பார்ப்பது போன்று நின்றேன். அந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். உபையே! திருக்குர்ஆனை ஒரு கிராஅத்தில் ஓதுமாறு கட்டளையிடப்பட்டது. நான் எனது உம்மத்திற்கு எளிதை தருமாறு கேட்டேன். உடனே இரண்டாவது முறையாக திருக்குர்ஆன் இரண்டு கிராஅத்தில் ஓதுமாறு கட்டளை வந்தது. உடனே நான் என் உம்மத்திற்கு எளிதை ஏற்படுத்துமாறு கேட்டேன். பிறகு மூன்றாவது முறை பதில் தரப்பட்டது. ஏழு கிராஅத்தில் ஓதுவீராக என்று கூறப்பட்டது. எனது ஒவ்வொரு கேள்விக்கும் பதில் தரும்போது ஜிப்ரயீல், 'இது அல்லாஹ்வின் கட்டளையாகும்; உங்களுக்கு துஆ செய்ய உரிமை தரப்பட்டுள்ளது' என்று கூறினார்கள். நீர் விரும்பியவற்றைக் கேட்கலாம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கேட்டேன். அல்லாஹ்வே! எனது உம்மத்தை மன்னிப்பாயாக. அல்லாஹ்வே! எனது உம்மத்தை மன்னிப்பாயாக. மூன்றாவது துஆவை ஒரு நாளுக்காக விட்டு வைத்துள்ளேன். அந்த நாளில் முழு உம்மத்தும் என் மீது கவனம் செலுத்தும். எந்த அளவுக்கு என்றால் இப்ராஹீம் கூட கூட கவனம் செலுத்துவார்.

(சஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் பிராணிகளுக்கான தொழுகை மற்றும் அதனுடைய கஸர்.... நூர் ஃபவுண்டேஷன் மொழிபெயர்ப்பு தொகுதி 3 பக்கம் 308–309)

ஹஸ்ரத் உபை கிராஅத்தில் முழுமையைப் பெற்றிருந்தார்கள். அதனை இதிலிருந்து அறியலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே அவரிடம் திருக்குர்ஆன் ஓதச் சொல்லிக் கேட்டார்கள்.

இந்த வகையில் அன்னார் வஃபாத் ஆன வருடம் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆன் ஓதச் சொல்லி விட்டு கூறினார்கள்: என்னிடம் ஜிப்ரயீல் வந்து உபை (ரலி) அவர்களிடம் ஓதச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். (சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 149. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய காலத்தில் ஓர் ஈரானியருக்கு குர்ஆன் ஓதச் சொல்லித் தந்தார்கள். ஒரு வசனத்தை ஓதினார். اِنَّ شَجَرَتَ الزَّقُّوۡمِ طَعَامُ الۡاَثِیۡمِ இதில் 'அஸீம்' என்று அவரால் கூற முடியவில்லை. 'ஸீம்' என்று வரும் இடத்தில் அவர் 'தீம்' என்று கூறினார். ஹஸ்ரத் உபை (ரலி) மிகவும் கஷ்டப்பட்டு விட்டார். எவ்வாறு நாம் இவருக்கு கற்றுக் கொடுப்போம் என்று கருதினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு கடந்து சென்றார்கள். அவரது கஷ்டத்தைப் பார்த்து அங்கு நின்றார்கள். ஈரானிய மொழியில் 'தஆமுல் அஸீம்' என்று தெளிவாகக் கூறி விட்டார். 'தஇீம்' என்று கூறியதும் அவர் 'அழீம்' என்று கூறி விட்டார். சரியான உச்சரிப்பைக் கூறி விட்டார். உடனே அன்னார் அவரது நாவை சரிசெய்யுங்கள் என்று கூறினார்கள். அவரது மொழியில் உள்ளபடி கூறி அவரை சரியான சொல்லைக் கூற வையுங்கள். இறைவன் உமக்கு கூலி வழங்குவான் என்று கூறினார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 152. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பராஅத் சூராவை ஓதினார்கள். இந்த சூரா அபூதர்தா, அபூதர் ஆகியோருக்கு தெரியாது. குத்பாவுக்கு இடையிலேயே ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம், 'சைக்கினையாக எப்போது இறங்கியது?' என்று கேட்டார். நான் இதுவரை இதனை கேட்டதில்லையே? உடனே உபை, 'சைக்கினையாக அமைதியாக இருங்கள்' என்று அமைதிப்படுத்தினார். தொழுது முடித்து வீட்டிற்குச் செல்ல எழும்போது அந்த இரு பெரியவர்களும் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம், 'நீர் எங்கள் கேள்விக்குப் பதில் தரவில்லையே?' என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் உபை (ரலி), 'இன்று உங்கள் தொழுகை வீணாகி விட்டது. அதுவும் ஒரு வீணான செயல் நடந்து விட்டது' என்று கூறினார்கள். உடனே அவ்விருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, 'உபை (ரலி) என்னைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்' என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அவர் கூறியது சரிதான்; குத்பாவின் பேசக் கூடாது என்று கூறினார்கள்.'

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 157. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

'அபூ முன்ஸிரே உமக்குத் தெரியுமா? அல்லாஹ்வின் வேதத்தில் உமக்கு தெரிந்தவற்றில் மிகவும் மகத்தான வசனம் எது?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உபை (ரலி), 'அல்லாஹ்வும் அவனது ரஸூலும் நன்கு அறிவர்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அபூ முன்ஸிரே! அல்லாஹ்வின் வேதத்தில் உம்மிடம் இருப்பதில் மகத்தான வசனம் எது என்று உமக்கு தெரியுமா?' அதாவது மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார்கள். நான், 'அல்லாஹு லாயிலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம்' என்று கூறினேன். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது நெஞ்சில் தட்டியவாறு, 'இறைவன் மீது ஆணையாக! அபூ முன்ஸிரே! உமது அறிவு வாழ்த்துக்குரியது! உமது பதில் எனக்கு பிடித்துள்ளது; சரியாகக் கூறினீர்' என்றார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் பிராணிகளுக்கான தொழுகை மற்றும் அதனுடைய கஸர்.... நூர் ஃபவுண்டேஷன் மொழிபெயர்ப்பு தொகுதி 3 பக்கம் 300)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில், ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் துபைல் பின் அம்ர் தூசி என்பவருக்கு ஓதச் சொல்லிக் கொடுத்தார். அவர் ஒரு கேடயம் பரிசாகத் தந்தார். ஹஸ்ரத் உபை (ரலி) அதனை அணிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்தார். அன்னார், 'இதனை எங்கிருந்து பெற்றீர்' என்றார்கள். அவர், 'ஒரு மாணவர் கொடுத்த அன்பளிப்பு' என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அதனை திருப்பிக் கொடுத்து விடுங்கள்; வருங்காலத்தில் இதுபோன்ற சன்மானம் பெறுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். இதுபோன்று இன்னொரு மாணவர் ஓர் ஆடையைப் பரிசளித்தார். அப்போதும் இதே நிலையே ஏற்பட்டது. பிறகு அவர் இதுபோன்ற விஷயங்களிலிருந்து முற்றிலும் விலகிக் கொண்டார். அதாவது திருக்குர்ஆன் ஓதச் சொல்லிக் கொடுப்பதற்கு சன்மானம் வாங்குவதில்லை என்று முடிவு செய்தார். சிரியா நாட்டின் மக்கள் குர்ஆன் ஓதுவதற்கு மதீனாவிலுள்ள குர்ஆனை

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI
Melapalayam

எழுதுபவர்கள் மூலம் திருக்குர்ஆனை எழுதி வாங்கிக் கொண்டார்கள். எழுதித் தருவதற்காக கூலியாக அந்த சிரியாவாசிகள் தம்முடன் அவரை உணவு உண்பதற்கு அமர்த்திக் கொள்ள விரும்புபவர் தம்முடன் அமர்த்தி உணவு கொடுப்பர். ஆனால் இவர் ஒருபோதும் அதனை ஏற்றுக் கொண்டதில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) ஒருமுறை அவரிடம், 'சிரியாவின் உணவு எவ்வாறிருக்கும்?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உபை (ரலி), 'நான் அவர்களின் உணவை உண்டு பார்த்ததில்லை; நான் சுயமாகவே தயாரித்து உண்கிறேன்' என்று கூறினார்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 151–152. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் உபை (ரலி) பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டார். (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) உஹது போரில் ஓர் அம்பு அவரது நரம்பில் பட்டது. அது Medium Vain என்று கூறப்படுகின்ற நரம்பில் பட்டு விட்டது. அதன் மூலம் தலை, மார்பு மற்றும் கை கால்களுக்கு இரத்தம் செல்கிறது. அதன் மீது அம்பு பட்டு விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மருத்துவரை அனுப்பினார்கள். அவர் அந்த நரம்பை வெட்டி விட்டார். அவர் தமது கையால் அந்த நரம்பை சரிசெய்தார்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 141–142. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

உஹது போரின் ஒரு சம்பவம் முன்னரும் கூறப்பட்டுள்ளது. இங்கும் சிறிது கூறுகிறேன். போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபை (ரலி) பின் கஅபிடம், 'காயமுற்றவர்களைச் சென்று பாருங்கள்' என்று கூறினார்கள். இவர் காயமுற்றவர்களைப் பார்த்தபோது சஅத் பின் அபீ (ரலி) அவர்களைச் சென்றடைந்தார். அவர் மிகவும் காயமுற்றிருந்தார். இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். உபை (ரலி) அவர்கள், அவரிடம் 'உங்களுடன் தொடர்புள்ள மக்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமாயின் என்னிடம் கூறுங்கள்' என்றார். ஹஸ்ரத் சஅத் (ரலி) புன்னகைத்தவாறு, 'முஸ்லிம்கள் இங்கு வந்தால் ஒரு தூதுச் செய்தி வழங்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்; நீங்கள் கண்டிப்பாக இந்தத் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பீர்கள் என்று எனக்கு வாக்குறுதி தாருங்கள்' என்று கூறினார். அதற்கு அவர், 'அந்தத் தூதுச் செய்தி என்ன?' என்று கேட்டார். "எனது சகோதர முஸ்லிம்களுக்கு எனது சலாத்தைத் தெரிவியுங்கள். எனது சமூகம் மற்றும் உறவினர்களிடம் கூற வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த அமானிதம் ஆவார்கள். நாம் நமது உயிரைக் கொடுத்து அந்த அமானிதத்தைப் பாதுகாக்க வேண்டும். நாங்கள் செல்கிறோம். அந்த அமானிதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை உங்களிடம் தருகிறோம். நீங்கள் அந்த அமானிதத்தைப் பாதுகாப்பதில் பலவீனம் காட்ட வேண்டாம்" என்று சஅத் (ரலி) கூறினார்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 338)

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ஸக்காத் கடமையாக்கப்பட்டபோது ஸக்காத் வசூலிப்பதற்காக அரபு மாநிலங்களில் வசூலிப்பவரை அனுப்பியபோது ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களை பனூ வலி, பனூ அஸர், பனூ சஅது ஆகியோரிடம் வசூல் செய்வதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் உபை (ரலி) ஒருமுறை ஓர் ஊருக்குச் சென்றபோது தமது எல்லா கால்நடைகளையும் கொண்டு வந்து முன்னால் நிறுத்தினார். இதில் எதை வேண்டுமானாலும் ஸக்காத்தாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் உபை (ரலி) இரண்டு வயதையுடைய ஒட்டகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஸதக்கா தருபவர், 'இதனைப் பெறுவதில் என்ன பயன்? இது பாலும் தராது. இதில் பயணம் செய்யவும் முடியாது. வேண்டுமென்றால் எனது இந்த பெண் ஒட்டகத்தை வாங்கிக் கொள்ளுங்கள். இது கனமாகவும் இருக்கிறது. நல்ல இளமையாகவும் உள்ளது' என்றார்.

ஹஸ்ரத் உபை (ரலி) கூறினார்கள்: அது ஒருபோதும் நடக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு மாற்றமாக நான் எதுவும் செய்யமாட்டேன். நீர் சொல்வதை விட சிறந்தது நீர் என்னுடன் வாருங்கள். மதீனா இங்கிருந்து ஒன்றும் தூரமில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செல்வோம். அன்னார் சொல்வதைச் செய்வோம் என்றதும் அவர் ஒப்புக் கொண்டார். உபை (ரலி) அவர்களுடன் அவர் ஒட்டகத்தை ஓட்டிக் கொண்டு மதீனா வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நடந்த கதையைக் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெரிய ஒட்டகத்தைத் தருவதுதான் உமது விருப்பம் எனில் அதனைத் தாருங்கள். அது ஏற்றுக்கொள்ளப்படும். இறைவன் உமக்கு அதற்கு கூலி தருவான். அவர் அந்த ஒட்டகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டு திரும்பிச் சென்றார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை முறைப்படுத்தி எழுதும் பணி தொடங்கியது. இதற்காக சஹாபாக்களின் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் கண்காணிப்பாளராக இருந்தார்கள். அவர்கள் திருக்குர்ஆனின் வார்த்தைகளைக் கூறுவார்கள். மக்கள் அதனை எழுதிக் கொண்டே செல்வார்கள். அந்த மக்களிடம் அரபி மொழி அறிவு இருந்ததால் ஒவ்வொரு வசனத்திலும் அது குறித்த கலந்துரையாடல்களும் நிகழ்ந்தன. தவ்பா உடைய வசனமாகிய (9:127) ثُمَّ انْصَرَفُوْا ۭ صَرَفَ اللّٰهُ قُلُوْبَهُمْ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَفْقَهُوْنَ என்று எழுதப்படும் போது, 'இது எல்லாவற்றுக்கும் கடைசியில் இறங்கியதாகும்' என்று மக்கள் கூறினர். அப்போது உபை (ரலி), 'இல்லை; இதற்குப் பிறகு இரு வசனங்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓதினார்கள். இது இறுதி வசனம் அல்ல. இறுதி வசனங்களுக்கு முந்தைய வசனங்களாகும்' என்றார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 142. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் நூற்றுக் கணக்கான பயனுள்ள விஷயங்களை நடைமுறைப்படுத்தினார்கள். அதில் ஒன்று மஜ்லிஸே சூரா ஆகும். இஸ்லாத்தின் மஜ்லிஸே சூராவின் ஏற்பாடு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஏற்பட்டது. இந்த சபை, அன்ஸார், முஹாஜிர்களின் ஒரு தொகுப்பாக இருந்தது. இதில் கஸ்ரஜ் கோத்திரத்தின் சார்பாக ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) உறுப்பினராக இருந்தார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 143–144. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஒரு மனிதர் அவரது பெயர் ஜாவாபிர் அல்லது ஜுபைபிர் என்பதாகும். அவர் கூறுகிறார்: நான் எனது ஒரு வேலைக்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றேன். உமர் (ரலி) அவர்களுடைய விலாப்புறத்தில் ஒருவர் நின்றிருந்தார். அவரது தலையும் ஆடையும் வெள்ளையாக இருந்தது. அவர், 'நிச்சயமாக நாம் உலகில் நமது இலக்கைச் சென்றடையும் வழியுணவு நம்மிடம் உள்ளது. அதன் மீது நமது அமல் உள்ளது. அதன் கூலி மறுமையில் கிடைக்கும்' என்று கூறினார். நான், 'அமீருல் முஃமினீன் அவர்களே! இவர் யார்?' என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி), 'முஸ்லிம்களின் தலைவர் உபை பின் கஅப்' என்று கூறினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378–379. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017)

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக [எவரையும்] நீர் ஒருபோதும் காண மாட்டீர். [4:146]**

A. BASHEER AHMAD, *Melapalayam*

அப்துர் ரஹ்மான் பின் அப்து காரி மூலமாக அறிவிக்கப்படுகிறது. நாம் ரமலான் உடைய ஓர் இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மஸ்ஜிதுக்குச் சென்றேன். மக்கள் தனித்தனி குழுவாக தொழுது கொண்டிருந்தார்கள். ஒருவர் தனியாகத் தொழுகிறார். ஒரு கூட்டத்தில் ஒருவர் தொழ அவர் பின் சிறிது மக்கள் தொழுது கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இவர்கள் அனைவரையும் ஒரே காரியின் கீழ் ஒன்றுபடுத்த வேண்டும் என்று கருதுகிறேன். அதுவே சிறந்ததாகும்' என்று கூறினார்கள். அன்னார் அவ்வாறு செய்வதற்கு உறுதியாக எண்ணம் கொண்டார்கள். பிறகு உபை பின் கஅப் (ரலி) அவர்களுடைய தலைமையில் மக்கள் இணைக்கப்பட்டனர். அது ரமலானில் உள்ள நஃபில் தொழுகையாக இருக்கலாம். (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 2010) ஹஸ்ரத் உபை (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நிறைய ஹதீஸ்களைக் கேட்ட பெரியவர்களுள் ஒருவராக இருந்தார்கள். இதனால் நிறைய சஹாபாக்கள் அவரது மாணவராக இருந்தார்கள். இந்த வகையில் அவரது பின் வந்த தாபியீன்களில் சில சஹாபாக்களின் கூட்டமும் இருந்தது. சஹபாக்கள் கூட அவரிடம் ஹதீஸ்களைக் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி), ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி), ஹஸ்ரத் அபூ மூஸா அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி), ஹஸ்ரத் சஹல் பின் சஅத் (ரலி), ஹஸ்ரத் சல்மான் பின் சஅத் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் உபை (ரலி) இடமிருந்து ஹதீஸ் அறிவைப் பெற்று பயனடைந்தார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 153 தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் கைஸ் பின் உபாதா (ரலி) மதீனாவில் சஹாபாக்களைச் சந்திக்க வந்தார். அவர் அறிக்கிறார்: நான் ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களை விட பெரியவராக யாரையும் காணவில்லை. தொழுகை நேரம் வந்தது. மக்கள் ஒன்று கூடியிருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) வந்திருந்தார்கள். ஒரு விவகாரத்தில் புரிய வைக்க வேண்டிய தேவை இருந்தது. தொழுகை முடிந்தது. ஹஸ்ரத் உபை (ரலி) எழுந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஹதீஸை மக்களிடம் கொண்டு சேர்த்தார்கள். அவர்களின் ஆர்வம் மிக அதிகமாக இருந்தது. எல்லா மக்களும் தன்னை மறந்திருந்தனர். கைஸுக்கு ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுடைய மகிமை குறித்த பெரும் தாக்கம் ஏற்பட்டது.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 154. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு பெண் வந்தார். தமது கணவர் மரணித்து விட்டார் என்றும், தாம் கர்ப்பமுற்றிருப்பதாகவும் கூறினார். திருக்குர்ஆனிலிருந்து புரிந்தவாறு பிக்ஹ் விவகாரங்களையும் தீர்த்து வைப்பவராக அவர் இருந்தார். அந்த கர்ப்பிணிப் பெண், 'எனது கணவர் இறந்து விட்டார். எனக்கு குழந்தை பிறந்த விட்டது. இத்தா முடிவடையவில்லை. கணவர் மரணித்த இத்தாவாகிய 4 மாதம் 10 நாட்கள் முடிவடையவில்லை. அதற்கு முன்னர் நான் அவரால் கர்ப்பமுற்று இருந்தேன். இப்போது நான் இத்தாவை முழுமை செய்ய வேண்டுமா? வேண்டாமா?' என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இத்தா காலம் முடியும் வரை அவ்வாறே இருக்குமாறு கூறினார். நிர்ணயிக்கப்பட்ட காலம் ஒரு விதவைக்கு எவ்வளவு உள்ளதோ அதுவரை இருக்குமாறு கூறி விட்டார். அப்பெண் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம் வந்தார். அன்னாரிடம் மார்க்க விளக்கம் கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு மார்க்கத் தீர்ப்பு வழங்கியுள்ளதாகக் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய பதிலை அப்பெண் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம் கூறினார். ஹஸ்ரத் உபை (ரலி), 'நீங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறுங்கள். பெண் ஹலால் ஆகி விட்டாள். இனி இத்தா உடைய தேவை இல்லை. என்னைப் பற்றி கேட்டால் நான் இங்குதான் இருக்கிறேன். வந்து அழையுங்கள்' என்றார். அந்தப் பெண் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்பெண்ணிடம் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களை அழைத்து வருமாறு கூறினார். ஹஸ்ரத் உபை (ரலி) வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார். நீங்கள் எங்கிருந்து அப்பெண்ணுக்கு அவ்வாறு கூறினீர்?

ஹஸ்ரத் உபை (ரலி) கூறினார்: குர்ஆனிலிருந்து கூறினேன். பிறகு வசனத்தை ஓதினார். (65:5) وَاُولَاتُ الْاَحْمَالِ اَجَلُهُنَّ اَنْ يَّضَعْنَ حَمْلَهُنَّ கர்ப்பமுற்ற பெண்களைப் பொருத்தவரை அவர்களின் இத்தா கர்ப்பத்தை விடுவிக்கும் வரை. அதற்குப் பிறகு வருகிறது. கர்ப்பமுற்றவள் விதவையாகி விட்டால் அவளும் இதில் அடங்குவார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹதீஸைக் கேட்டுள்ளேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அப்பெண்ணிடம், 'இவர் என்ன கூறுகிறாரோ அப்படியே செய்யுங்கள். அவர் சரியாகவே கூறுகிறார்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுடைய வீடு மஸ்ஜிதுக்கு அருகில் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஸ்ஜிதை விரிவாக்கம் செய்ய விரும்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், 'உங்கள் வீட்டை விற்று விடுங்கள்; அதனை நான் பள்ளிவாயிலுடன் இணைக்கப் போகிறேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி), 'அது நடக்காது' என்றார். ஹஸ்ரத் உமர் (ரலி), 'சரி நீர் அதனை அன்பளிப்பாக தந்து விடும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அதற்கும் மறுத்து விட்டார். அவர் தனது விருப்பத்திற்கு உரிமையாளராக இருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி), 'அவ்வாறெனில் நீரே பள்ளிவாயிலை விரிவுடுத்தும். நீர் உமது தரப்பிலிருந்து அதனை செய்தால் உமக்கு பெரும் கூலி கிடைக்கும். உம்மத்திற்கு பெரும் பயன் ஏற்படும். பள்ளிவாயில் பெரிதாகும். உமது வீட்டை அதற்குள்ளேயே அமைத்துக் கொள்ளும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி), 'அதுவும் நடக்காது' என்று கூறி விட்டார். அவர் அதற்கும் தயாராக இல்லை. ஹஸ்ரத் உமர் (ரலி), 'கூறப்பட்ட மூன்றில் ஒன்றை ஏற்க வேண்டும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி), 'நான் எதனையும் ஏற்க மாட்டேன்' என்றார். இறுதியில் இருவரும் சேர்ந்து உபை பின் கஅப் (ரலி) அவர்களை தமது நீதிபதியாக நியமித்தார்கள். நீதிபதி வரை நிலைமை சென்றது. ஹஸ்ரத் உபை (ரலி) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'விருப்பமில்லாமல் இருக்கும் அவரது இடத்தை வாங்க உமக்கு என்ன உரிமை உள்ளது. மேலும் (உமரே!) நீர் வாங்க முடியாது' என்றார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி), உபை (ரலி) அவர்களிடம், 'இது குறித்து நீர் திருக்குர்ஆனிலிருந்து தீர்ப்பை எடுத்தீரா? அல்லது ஹதீஸில் இருந்தா?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உபை (ரலி), 'ஹதீஸிலிருந்து எடுத்தேன். ஹஸ்ரத் சுலைமான் (அலை) மஸ்ஜிது அக்ஸாவின் கட்டுமானம் ஆரம்பித்தபோது அவரது ஒரு சுவரை மற்றவரின் நிலத்தில் அமைத்தார். நீர் அவரிடம் அனுமதி பெற்று செய்யுங்கள் என்று சுலைமான் (அலை) அவர்களுக்கு வஹி வந்தது. இதனைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமைதியாகி விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கிலாஃபத்தின் மீது கலப்பின்மையும் நன்றியுடைமையும் இருந்தது. தமது இயல்பினால் அவரது எண்ணம் மேலே வந்து விட்டது. ஒருமுறை அதனால் மறுத்து விட்டார். எவ்வாறிருப்பினும் அவரிடம் நன்மையும் இறையச்சமும் இருந்தது. பைஅத் செய்தவர். கிலாஃபத் மீது கண்ணியமும் இருந்தது. எனவே அது வெளியே வந்தது. அவர், ஹஸ்ரத் உமர் (ரலி) அமைதியான பிறகு

## திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும், அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, *Ameer, Melapalayam*

அவர்களிடம், 'நல்லது; எனது வீட்டை பள்ளிவாயிலுடன் இணைக்கிறேன்' என்று கூறினார்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 155. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களை தமத்துஃ முறையில் ஹஜ் செய்வதைத் தடுக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஹஜ் மூன்று வகைப்படும். ஒரு ஹஜ் முஃப்ரத். ஒரு ஹஜ் தமத்துஃ. ஹஜ்ஜே தமத்துஃ என்பது இளைஞர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். அது என்னவெனில் உம்ரா உடைய இஹ்ராமை கட்டி மக்கா செல்கின்றார்கள். உம்ரா செய்கின்றனர். பிறகு இஹ்ராம் களைந்து விடுகிறார்கள். பிறகு துல்ஹஜ் 8 ஆம் நாள் இஹ்ராம் அணிந்து ஹஜ் செய்கின்றனர். இது ஹஜ்ஜே தமத்துஃ ஆகும். பொதுவாக ஹஜ், ஹஜ்ஜே முஃப்ரத் ஆகும். கிரான் என்பது ஒரே இஹ்ராமில் ஹஜ்ஜையும் உம்ராவையும் செய்வதாகும். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் உமர் (ரலி) ஹஜ்ஜே தமத்துஃவிலிருந்து தடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் கூறினார்கள்: அதனை தடுக்க எந்த உரிமையுமே இல்லை. அவர்கள் விரும்பினார்கள்; தடுத்தார்கள். அது தவறு என்றதும் உமர் (ரலி) அவர்கள் அதனைச் செய்யவில்லை. பிறகு ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கூபாவிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள நஜ்து பகுதியிலுள்ள ஹீரா என்ற ஊரில் வந்து இஹ்ராம்களைக் களைந்து வேறு வண்ண உடை அணிவதை தடுக்க வேண்டும் என்பது அந்த விருப்பமாகும். ஆடைகளுக்கு நிறமேற்ற மிருகங்களில் சிறுநீரைப் பயன்படுத்துகிறார்கள்.

ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதற்கு உமக்கு அனுமதி இல்லை. ஏனெனில் அத்தகைய வண்ண நிறமுடைய உடையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அணிந்திருந்தார்கள். நாங்களும் வண்ண உடை அணிந்திருந்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் ஆட்சேபனை செய்யப்படவில்லை என்றதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமைதியடைந்தார்கள். நீர் சொல்வது சரிதான் என்று கூறினார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 156. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி. முஃஜமுல் பலதான் தொகுதி 2 பக்கம் 328. ஃபிக்காஹ் அஹ்மதிய்யா தொகுதி 1 பக்கம் 355–356)

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஒரு தோப்பு விஷயத்தில் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் அழத் தொடங்கினார். உமது காலத்திலா இவ்வாறு நடக்க வேண்டும் என்று கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய எண்ணம் அவ்வாறல்ல. நீர் எந்த முஸ்லிமைக் கொண்டும் இவ்விஷயத்தில் தீர்ப்பு சொல்ல வைக்கலாம் என்றார்கள். உமக்கும் எனக்கும் இடையில் ஒரு கருத்து வேறுபாடுதான். நான் கட்டளையிடவில்லை. எது சரி என்று வேறு ஒருவர் மூலம் தீர்ப்பளிக்கச் செய்யுங்கள். உமது எண்ணம் சரி என்று கருதுகிறேன் என்றவாறு ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள், ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களின் பெயரைக் கூறினார்கள். அவர் மூலம் தீர்ப்பு சொல்லச் செய்யலாம் என்பதில் ஹஸ்ரத் உமர் இணங்கினார். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களின் முன்னிலையில் வழக்கு எடுத்து சொல்லப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் கலீஃபாவாக இருந்தார்கள். ஆனால் ஒரு தரப்பின் வாதி என்ற முறையில் ஸைத் (ரலி) அவர்களின் முன்னிலையில் வருகை தந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு உபை (ரலி) அவர்களுடைய வாதத்தில் மறுப்புதான் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) நீங்கள் மறந்து விட்டால் நினைவுபடுத்திக் கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உபை (ரலி), சிறிது நேரம் யோசித்து விட்டு எனக்கு எதுவும் நினைவுக்கு வரவில்லை என்றார். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாமே ஒரு சம்பவம் கூறி இவ்வாறு ஒரு சம்பவம் நடந்ததே என்று கூறியதும் அவர் அமைதியாக இருந்தார். ஹஸ்ரத் சைத் (ரலி) ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களிடம் நீங்கள் கேட்பதற்கு என்ன ஆதாரம்? உங்கள் பதில் என்ன? என்று கேட்டார்கள். அவர் ஒன்றும் கூறவில்லை. எந்த ஆதாரமும் இல்லை. எனவே நீங்கள் அமீருல் முஃமினீனிடம் சத்தியம் செய்யக் கூறாதீர்கள். கூறுங்கள் என்று இருக்க வேண்டும். கூற வேண்டாம் என்று எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சத்தியம் செய்ய வேண்டும் என்றால் எனக்கு அதில் எந்த தயக்கமும் இல்லை. என்னிடம் வாங்கினாலும் சரி வாங்கா விட்டாலும் சரி. பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறே இருந்தது.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 145–146. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) பின் அஃப்பான் அவர்கள் குர்ஆனை ஒன்று திரட்டுவதில் குறைஷிகள் மற்றும் அன்ஸார் அடங்கிய 12 பேரை நியமித்தார்கள். அதில் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலி) ஆகியோர் இருந்தனர். (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 381. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனில் பல பிரதிகளில் கிராஅத் அளவில் சிறு சிறு வேறுபாடுகள் பொதுவானதாகி விட்டன. அன்னார் இந்த வேறுபாட்டை களைய நினைத்தார்கள். பிறகு அன்னார் கிராஅத் அறிந்த சஹாபிகளை ஒன்று திரட்டி தனித்தனியாக அவர்களின் ராகத்தைக் கேட்டார்கள். அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி), மஆஸ் பின் ஜபல் (ரலி) உடைய உச்சரிப்பில் வேறுபாடு இல்லை. அதனைப் பார்த்து ஹஸ்ரத் உஸ்மான், இவர்களின் வார்த்தைகளிலேயே குர்ஆனை ஒன்று திரட்டுவேன் என்றார்கள். குறைஷி மற்றும் அன்ஸாரின் 12 பேர் திருக்குர்ஆனில் நல்ல திறமை மிக்கவர்களாக இருந்தனர். அவர்களிடம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) இந்த முக்கிய பணியை ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களை இந்த அவைக்கு தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் உபை (ரலி) திருக்குர்ஆனின் வார்த்தைகளை சொல்லச் சொல்ல ஹஸ்ரத் ஸைத் (ரலி) எழுதிக் கொண்டே சென்றார்கள். திருக்குர்ஆனில் தற்போதைய பிரதி ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) உடைய கிராஅத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 143. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

உதை பின் ஸம்ரா (ரலி) கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களிடம் கூறினேன். நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபா ஆவீர்கள். என்ன ஆகி விட்டது? நாங்கள் தொலை தூரத்திலிருந்து உங்களிடம் வருகிறோம். காரணம் நீங்கள் ஏதாவது சம்பவங்கள் அல்லது செய்திகள் கூறுவீர்கள் அல்லது எங்களுக்கு கற்பிப்பீர்கள் என்பதற்காக வருகிறோம். நீங்களோ எங்களது வார்த்தைகளை மதிக்கவில்லை. மிகச் சாதாரணமாக நினைக்கிறீர்கள் என்றார். உடனே ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அடுத்த ஜுமுஆ வரை உயிருடன் இருந்தால் அந்த விஷயங்களைக் கூறுவேன். அதனைக் கேட்டு விட்டு நீங்கள் என்னை வாழ விட்டாலும் சரி, கொன்று விட்டாலும் சரி' என்றார்கள்.

பிறகு ஜுமுஆ நாள் வந்தது. நாங்கள் மதீனா சென்றோம். மக்கள் கூட்டம் தெருக்களில் அதிகமாக இருந்தது. 'இந்த மக்களுக்கு என்னவாயிற்று?' என்று கேட்டேன். அதற்கு ஒருவர், 'நீங்கள் இந்த ஊரில் இல்லையா?' என்றார். அதற்கு அந்த மனிதர் இல்லையே? என்றதும், அவர் 'இன்று முஸ்லிம்களின் தலைவர் உபை பின் கஅப் (ரலி) இறந்து விட்டார்' என்று கூறினார்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும்
கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில்
அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது?
அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு
அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM
*Qaid, Majlis Khuddamul Ahmadiyya, Melapalayam*

நான் கூறினேன்: வல்லாஹ் நிச்சயமாக நான் அதுபோன்ற ஒரு நாளைப் பார்க்கவில்லை. உபை பின் கஅப் (ரலி) அவர்களுக்கு இருந்த தலைமைத்தனம் போன்று வேறு ஒருவருக்கு இருந்ததாக நான் காணவில்லை. (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 380. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) நான் ஒரு விஷயம் கூறுவேன். அதனால் நீங்கள் என்ன செய்தாலும் சரியே என்று அன்னார் கூறியதாக கூறினேன் அல்லவா! அவ்வாறு கூறியதை அறிவிப்பாளர் தெரிவித்த நோக்கம் ஒருவேளை இதுவாக இருக்கும். அன்னார் அதுபோன்ற ஒரு செய்தியைக் கூறுவதிலிருந்து அல்லாஹ் காப்பாற்றி விட்டான். ஹஸ்ரத் உபை (ரலி) மன விருப்பத்துடன் கூற விரும்பாத ஒரு செய்தியாக அது இருந்திருக்கிறது. அதுவல்லாமல் அதற்கு வேறென்ன காரணம் என்று அல்லாஹ்வே நன்கறிந்தவன். இவரைப் போன்ற தலைமைத்தனம் கொண்ட ஒரு மனிதரைக் கண்டதில்லை என்ற ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) பற்றி அவர் கூறியுள்ளார்.

ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அறிவிப்பு. நான் எட்டு இரவுகளில் திருக்குர்ஆனை முழுமையாக ஓதுகிறேன். (அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 379. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017) ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அளவு கடந்த அன்பிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியின் தூண்களாகிய பேரீத்தம்பழத் தண்டுகளின் அருகில் நின்று குத்பா கொடுத்தார்கள். பிறகு அவர்களுக்காக மிம்பர் உருவாக்கப்பட்டது. ஜுமுஆ நாளில் அன்னார் அதன் மீது அமர்ந்து குத்பா கொடுத்தார்கள். அப்போது முதலில் நின்ற தூண்களிலிருந்து கதறும் சத்தம் வந்தது. பள்ளிவாயிலில் இருந்த அனைவரும் அதனைக் கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தூணிடம் வந்து தமது கையை அதில் வைத்தார்கள். அந்தத் தூண் அப்பாவி குழந்தை அழும்போது அருகில் வந்து அமைதிப்படுத்தும்போது அமைதியாவது போன்று அமைதியானது. சப்தம் வருவது நின்றது. மஸ்ஜிது உடைத்துக் கட்டப்பட்டது. அப்போது உபை பின் கஅப் (ரலி) அந்த தூணை வாங்கிச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் மீது சாய்ந்து நின்றதற்காக அவர் அதனை வாங்கியவாறு தமது வீட்டிற்குச் சென்றார்கள். பிறகு கரையான் அதனை சிறிது சிறிதாகத் தின்று விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பினால் அதனை தம்மிடம் வைத்துக் கொண்டிருந்தார். அஹ்மது பின் ஹம்பல் அறிவிப்பாகும். புகாரியின் சில ஹதீஸ்களும் உள்ளன.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் ஹதீஸ் எண் 14075. சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 2095. சுனன் இப்னு மாஜா ஹதீஸ் எண் 1414. சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 158. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபிகளில் ஆறு காஸிகள் இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் அபூமூஸா அஷ்அரி (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி).

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 170. தாருல் குதுபு இல்மிய்யா பைரூத் லெபனான் 2016)

சம்ரா பின் ஜுன்துப் (ரலி) பெரும் மகத்துவமிக்க சஹாபி ஆவார். இவர் தொழும்போது தக்பீர் கூறி சூரா தொடங்கும் முன் சிறிது இடைவெளி விடுவார்கள். அல்லாஹு அக்பர் என்று கூறி சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு சூரா ஃபாத்திஹா ஓதி வந்தார்கள். மக்கள் இதனை ஆட்சேபனை செய்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதி அனுப்பினார்கள். இவ்வாறு இவர் செய்கிறார். இதன் உண்மை நிலை என்ன? ஹஸ்ரத் உபை (ரலி) சுருக்கமாக பதில் எழுதினார்கள். அவரது நடைமுறை ஷரீஅத்தின்படி உள்ளதேயாகும். சிறிது இடைவெளி விடுவதில் தவறில்லை. ஆட்சேபனை செய்பவர்கள் தவறு செய்கின்றனர்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 154. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஹஸ்ரத் சுவைது பின் கஃபலா (ரலி), ஸைது பின் சவ்ஜான் (ரலி), சுலைமான் பின் ரபிஆ (ரலி) உடன் ஒரு போருக்குச் செல்லும் போது உஸைப் என்ற இடத்தில் ஒரு சவுக்கு கிடந்தது. பனூ தமீம் உடை ஒரு பள்ளத்தாக்காகிய காதிஸியா மற்றும் முகீஸாவுக்கு இடையிலுள்ள காதிஸியாவிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள ஒரு தண்ணீர் உள்ள இடம் இருந்தது. அந்த இடத்தில் அதனை சுவைது என்பவர் எடுத்துக் கொண்டார். அதனை எறிந்து விடும் என மக்கள் கூறினர். ஒருவேளை அது ஒரு முஸ்லிம் உடையதாக இருக்கலாம் என்றனர். அவர், நான் அதனை விட்டு விடமாட்டேன். ஏதாவது ஒரு ஓநாய்க்கு அது உணவாகி விடலாம். அதனை விட நான் அதனை பயன்படுத்துவது சிறந்தது. சில தினங்களில் சுவைது ஹஜ்ஜுக்குச் செல்ல நினைத்தார். வழியில் மதீனா இருந்தது. உபை (ரலி) அவர்களிடம் சென்றார். சம்பவத்தைக் கூறினார்.

அப்போது உபை (ரலி) கூறினார்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் 100 தினாரை கிழே கிடந்து எடுத்தேன். நீர் எடுத்தது சவுக்கு. நான் எடுத்தது தங்கக் காசு. மொத்தத்தில் அது அமானிதப் பொருளேயாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்கள் என்று கேளுங்கள்.

ஹஸ்ரத் உபை (ரலி) கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். ஒரு வருடம் வரை இதனை மக்களுக்கு தெரியப்படுத்தி, அறிவித்து வாரும். ஒரு வருடம் கழிந்ததும் பணத்தின் அடையாளத்தை நினைவில் வைத்தவாறு மேலும் ஒரு வருடம் வைத்திருக்க வேண்டும். அடையாளம் சரியாகக் கூறி ஒருவர் கேட்டால் அவரிடம் கொடுத்து விட வேண்டும். இல்லையென்றால் அது உம்முடையதாகும். (சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 156. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி. ஃபர்ஹங் சீரத் பக்கம் 197) முழுமையான இரண்டு வருடங்கள். ஒரு வருடம் அறிவிக்க வேண்டும். அடுத்த வருடம் அடையாளம் நினைவில் இருக்க வேண்டும். அடையாளம் சொல்லி விட்டால் கொடுத்து விட வேண்டும்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 157. தாருல் இஷாஅத் பதிப்பகம். உருது பஜார், கராச்சி)

ஒருவர் பள்ளிவாயிலில் காணாமல் போன பொருள் பற்றி கூச்சல் இட்டுக் கொண்டிருந்தார். எனது இன்ன பொருளைக் காணவில்லை என்று அறிவித்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுக்கு கோபம் வந்து விட்டது. காணாமல் போன பொருளை அறிவித்த அவர், நான் வீணான விஷயம் ஒன்றும் கூறவில்லையே! என்றார். ஹஸ்ரத் உபை (ரலி), இவ்வாறு அறிவிப்பதும் பள்ளிவாயிலில் ஓர் உலகியல் பொருளை அறிவிப்பதும் மரியாதைக்கு மாற்றமான செயலாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உபை (ரலி) மரணமடைந்த வருடம் குறித்து பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் உபை (ரலி) மரணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 22–ல் நடந்தது. இன்னோர் அறிவிப்பில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) உடைய கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 30 –ல் நடந்தது என்று வருகிறது. இதுவே மிகவும் நம்பத்தகுந்த கூற்றாகும். ஏனெனில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுடைய தலைமையில் குர்ஆனைத் தொகுக்கும் பணியை ஒப்படைத்திருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 381. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017. அல் அஸாபா தொகுதி 1 பக்கம் 35–36 தாருல் ஃபிக்ரிய்யா பைரூத் 2017)

உபை உடைய சந்ததிகள் துபைல், முஹம்மது ஆவர். இந்த இரு குழந்தைகளின் தாயார் பெயர் உம்மே துபைல் பின்த் துபைல் ஆகும். இவர் தோஷ் கோத்திரத்தைச் சார்ந்தவர். உபை உடைய ஒரு மகள் பெயர் உம்மே அம்ர் என்று வந்துள்ளது.

(அத்திப்காத்துல் குப்ரா லிஇப்னு ஸஅத் தொகுதி 3 பக்கம் 378. முஅவ்விஸ் பின் அஃப்ரா (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2017)

இவருடைய இந்த சம்பவம் இத்துடன் முடிகிறது.

**- தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஜாமுத்தீன்**

சான்றுகளைப் பதிவிட்டதில் உதவி செய்தவர் **மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அயர்லாந்து சுற்றுப் பயணம் 28 செப்டம்பர் 2014

*தொகுதி 5 இதழ் 45-ன் தொடர்ச்சி...*

ஹுஸூர் அவர்கள் பெண்கள் தன்னுடைய நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையாக நடத்துகின்றார்கள். அவர்கள் மீனா பஜார் தோனியில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அழைப்பிதழ் கொடுத்து மக்களை அழைக்கின்றார்கள். மக்கள் வருவதன் மூலம் ஜமாஅத்துடன் அவர்களுடைய தொடர்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கிறார்கள். மேலும் அந்தச் சந்தர்ப்பத்தில் Flyers விநியோகம் செய்ய முடியும். புத்தகத்தையும் அவர்களுக்குக் கொடுக்க முடியும். இவ்வாறு தப்லீகும் நடைபெறும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் யூ.கே -விலுள்ள இஸ்லாமாபாத் ஜமாஅத்தும் திருவிழா பாணியில் உணவுப் பொருட்கள் மட்டும் அல்லாமல் அதில் புத்தகங்களும் வைத்திருந்தார்கள். வருகை தந்த மக்களுக்கு அந்தப் புத்தகத்தையும் கொடுத்தார்கள். அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டு அதனால் கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடந்தது. அதன் மூலம் ஒரு தொடர்பு ஏற்பட்டு விட்டது. மேலும் இந்த நிகழ்வு தப்லீகிற்கான வழிவகையாக அமைந்து விட்டது. குத்தாமுல் அஹ்மதிய்யாவும் இதே தோரணையில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அது கண்காட்சியாக இருந்தாலும் சரி, மீனா பஜாராக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவது ஒரு நிகழ்வாக இருந்தாலும் சரி. அதன் உண்மையான நோக்கம் மற்றும் குறிக்கோள் தப்லீகிற்கான தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். மக்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்பதே நம்முடைய அசல் குறிக்கோளாகும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்களிடம் இங்கு ஒவ்வொரு வருடமும் சவூதி அரேபியாவிலிருந்து 15 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்பதற்காக வருகை தருகிறார்கள் என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு ஹுஸூர் அவர்கள் அவர்களுடன் தொடர்பை மேற்கொள்ளுங்கள். இவர்கள் தங்களுடைய அமைப்பிலிருந்து சோர்வடைந்து உள்ளார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் வஹாபி மற்றும் ஸல.்.பி போன்ற பிரிவுகளினால் மனம் தளர்ந்து காணப்படுகிறார்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்களிடம் கார்க் ஜமாஅத்தின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அங்கு ஜமாஅத்திடம் மக்கள் ஒன்று கூடுவதற்கும் தப்லீகின் தொடர்பில் உள்ளவர்களை அழைத்துச் செல்வதற்காகவும் எந்த இடமும் இல்லை என்று கூறப்பட்டது. அதற்கு ஹுஸூர் அவர்கள் உங்களுக்கென்று தனி சென்டர் அமைப்பதற்கான இடத்தைப் பாருங்கள் அல்லது ஏதாவது கட்டடத்தைப் பாருங்கள். உங்களுடைய தேவைக்கு ஏற்றாற்போல் தேடுங்கள். பிறகு என்னிடம் கூறுங்கள் என்று கூறினார்கள். மேலும் செலவு தொடர்பான சில அமைப்பு ரீதியான வழிகாட்டலை ஹுஸூர் அவர்கள் வழங்கினார்கள்.

நாட்டின் தலைநகரமான டப்லினில் பள்ளிவாயில் கட்டுவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் நகரத்தின் வெளியே மக்கள் செல்லக் கூடிய இடத்தைப் பார்க்கவும். மேலும் எப்படிப்பட்ட இடத்தை நீங்கள் பார்க்க வேண்டும் என்றால் நம்முடைய தேவைகளுக்கு ஏற்றார் போல் அந்த இடம் இருக்க வேண்டும் என்ற வழிகாட்டலை வழங்கினார்கள்.

ஹுஸூர் அவர்கள் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்: சாதாரண அஹ்மதிக்கு ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு உள்ளது. நீங்கள் மக்களுடன் மென்மையான முறையிலும், அனுதாபத்துடனும் உண்மையுடனுடம் அன்புடனும் நடந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவருடைய பேச்சையும் கேளுங்கள். மேலும் ஒரு தொண்டனாக இருந்து பணிபுரியுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'செய்யதுல் கவ்மி காதிமுஹும்' அதாவது 'சமுதாயத்தின் தொண்டனே அதன் தலைவன் ஆவான்' என்று கூறியுள்ளார்கள்.

மேலும் ஹுஸூர் அவர்கள் யூ.கே ஜமாஅத்தின் மஜ்லிஸே ஷூராவில் நான் நிகழ்த்திய சொற்பொழிவை நீங்கள் கேட்டு விட்டீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு தேசியத் தலைவர் நாங்கள் அனைவரும் எங்களுடைய செயற்குழுக் கூட்டத்தில் கேட் விட்டோம் என்று பதிலளித்தார்.

கூட்டத்தின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் துணைச் செயலர் வக்.்.பே ஜதீது நவ்முபாயீன் யூசு.்.ப் பென்டர் வழிகாட்டல் வழங்கியவாறு தாங்களுக்கு இந்த வருடத்திற்கான பைஅத்தின் இலக்கு இரண்டு ஆகும். இரண்டு முபல்லிக்மார்கள் மற்றும் தாங்கள் மூவருக்கான இலக்கு தலா இரண்டு பைஅத் ஆகும். உங்கள் மூவரில் யார் இந்தக் குறிக்கோளை அடைகிறார் என்பதைப் பார்ப்போம் என்று கூறினார்கள்.

1.10 மணிக்கு இந்தக் கூட்டம் முடிவுக்கு எட்டியது. இறுதியில் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களுடன் குரூப் போட்டோ எடுப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

## ஆமீன் நிகழ்ச்சி

நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஹுஸூர் அவர்கள் மஸ்ஜிது மர்யம் வருகை தந்தார்கள். அங்கு ஆமீன் நிகழ்ச்சி நடைபெற்றது. ஹுஸூர் அவர்கள் கீழ்வரும் சிறுவர்கள் சிறுவர்களிடமிருந்து திருக்குர்ஆன் ஒவ்வொரு வசனத்தைக் கேட்டார்கள். பிறகு இறுதியில் துஆ செய்தார்கள்.

ஹாரிஸ் அஹ்மது, ரோஹான் மலிக், மஹ்மூது ஷர்மா, பாஸில் அப்துல் வதூத், ஜஹாங்கீர் ரஷீத், நஸர் ஸயீது, அப்துல் மு.்.பிர், வலீத் அஹ்மது, ஹம்ஸா அஹ்மது, ஸகீர் அஹ்மது, காகான் அஹ்மது, ஜாஸியா கான், தானியா அஹ்மது, லபீபா இ.்.ப்திகார், ஸமராக கான், தன்ஸீலா.

யூசு.்.ப் பென்டர் சாஹிப் அவர்கள் ஒரு ஜரிஷ் இளைஞரிடம் ஒரு வருடத்திற்கு முன் பைஅத் வாங்கி இருந்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் திருக்குர்ஆனைக் கற்றுக் கொண்டு முழுமை செய்துள்ளார்கள். அவருக்கான ஆமீன் நிகழ்ச்சியும் நடந்தது. ஹுஸூர் அவர்களும் அவரிடமிருந்து திருக்குர்ஆனின் சில வசனங்களைக் கேட்டார்கள். பிறகு துஆ செய்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் ளுஹர் மற்றும் அஸ்ர் ஜமாஅத்தாகத் தொழுதார்கள். தொழுகைக்குப் பிறகு பள்ளிவாசல் வெளியே வருகை தந்தபோது ஒலி அமைப்பிற்காக வந்திருந்த ஒரு ஜரிஷ் இளைஞர் ஹுஸூர் அவர்களுக்கு கை கொடுக்கக்கூடிய நற்பேற்றைப் பெற்றார். ஹுஸூர் அவர்கள் அந்த இளைஞருக்கு "The Confernece of World Relgions" என்ற புத்தகத்தைக் கொடுத்தார்கள். அதன் பிறகு பள்ளிவாசலிலுள்ள வெளிப்புற முற்றத்தில் ஹுஸூர் அவர்களின் சுற்றுப் பயணம் மற்றும் நிகழ்ச்சிகளை கவரேஜ் செய்து நேரடியாக ஒளிபரப்புவதற்காக இலண்டனிலிருந்து அல்லது அயர்லாந்து வருகை தந்த உலகளாவிய M.T.A குழுவுடன் போட்டோ எடுப்பதற்கான பாக்கியத்தைப் பெற்றார்கள்.

அதன் பிறகு அயர்லாந்தைச் சார்ந்த இரண்டு முபல்லிக் -மார்கள் இப்ராஹீம் நோனன் சாஹிப், ரபிப் அஹ்மது மிர்ஸா மற்றும் கால்வே ஜமாஅத்தின் உள்ளூர் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களும் ஹுஸூர் அவர்களுடன் போட்டோ எடுப்பதற்கான பாக்கியத்தைப் பெற்றார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா யூ.கே -வின் பொதுத்துறை சார்பாக ஐந்து குத்தாம்கள் கொண்டு பாதுகாப்புக் குழுவும் ஹுஸூர் அவர்களின் இந்த அயர்லாந்து பயணக் குழுவுடன் வந்திருந்தது. அந்தக் குழுவும் ஹுஸூர் அவர்களுடன் போட்டோ எடுப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

ஹுஸூர் அவர்கள் மஸ்ஜிது மர்யத்திலிருந்து மீண்டும் ஹோட்டல் செல்வதற்காக வண்டியின் அருகில் வந்தபோது ஒலி அமைப்பில் பணிபுரியக் கூடிய முஸ்லிம் அல்லாத ஜரிஷ் நண்பர் ஹுஸூர் அவர்களின் அருகில் வந்து போட்டோ எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்தினார். ஹுஸூர் அவர்கள் கருணையின் அடிப்படையில் போட்டோ எடுப்பதற்கான பாக்கியத்தை வழங்கினார்கள். இதனால் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மேலும் ஹுஸூர் அவர்களைச் சந்தித்து ஹுஸூருடன் தொழுத பிறகு இங்கு எனக்கு இறைவன் கிடைத்து விட்டான் என்று முன்பே கூறியிருந்தார். அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் ஹோட்டல் சென்று விட்டார்கள்.

### கால்வேயிலிருந்து டப்லினிற்குப் புறப்படுதல்

இன்று நிகழ்ச்சி நிரலிற்கேற்ப கால்வேயிலிருந்து டப்லின் புறப்பட வேண்டியிருந்தது. பிற்பகல் 3.00 மணி 50 நிமிடத்தின் போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஹோட்டலில் இருந்து வெளியேறினார்கள். கால்வே ஜமாஅத்தைச் சார்ந்த அன்பர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் ஹுஸூர் அவர்களை வழி அனுப்புவதற்காக ஹோட்டலுக்கு வெளியே ஒன்றுகூடி இருந்தார்கள். சிறுவர் மற்றும் சிறுமிகளின் குழு, பிரியா விடையின் துஆக்கள் அடங்கிய நஸ்மை பாடினார்கள். ஹுஸூர் அவர்கள் தன்னுடைய கையை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி துஆ செய்தார்கள்.

அதன் பிறகு அங்கிருந்து டப்லினுக்கான பயணம் புறப்பட்டது. கால்வேயிலிருந்து டப்லினுக்கான பயண தூரம் 120 மைல் ஆகும். ஒரு மணி நேரம் 50 நிமிட பயணத்திற்குப் பின்பு 5 மணி 40 நிமிடத்தில் Castle Knock என்ற ஹோட்டலுக்கு ஹுஸூர் அவர்கள் வருகை தந்தார்கள். ஹோட்டலுக்கு வெளியே டப்லின் ஜமாஅத்தின் ஆண்கள் மற்றும் பெண்கள் ஹுஸூர் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

டாக்டர் அப்துல் முன்இம் சாஹிப் அவர்கள் தங்கள் குடும்பத்தாருடன் அங்கிருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் டாக்டர் அப்துல் முன்இம் சாஹிப் அவர்களிடம் அவர்களின் மனைவி டாக்டர் ரூபினா கரீம் சாஹிபா மரணம் அடைந்ததை அறிந்து ஆழ்ந்த அனுதாபங்களை வெளிப்படுத்தினார்கள். மேலும் மர்ஹூமாவின் உறவினர்களிடமும் ஆழ்ந்த துக்கத்தை வெளிப்படுத்தினார்கள். பிறகு மர்ஹூமாவின் இரண்டு வாகி∴பே நவ் குழந்தைகளையும் தன்னுடன் கட்டி அணைத்து அன்பை வெளிப்படுத்தினார்கள். கண்ணியத்திற்குரிய ஹுஸூர் அவர்களின் மனைவியும் மர்ஹூமாவின் பெண் உறவினர்களோடு ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் மர்ஹூமாவின் இரண்டு குழந்தைகளையும் தன் பக்கம் அழைத்து அன்பு காட்டினார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்களின் தங்கும் இடமான அடுக்கு மாடிக்குச் சென்று விட்டார்கள்.

டாக்டர் ரூபீனா கரீம் சாஹிபா 27 செப்டம்பர் 2014 அன்று அயர்லாந்தில் மரணமடைந்து விட்டார்கள். நீண்ட காலம் லஜ்னா அமைப்பின் பொதுச் செயலராகவும் பொருளாளராகவும் இருந்தார்கள். அன்னாரின் மரணம் வரை கிழக்கு மண்டலத்தின் உள்ளூர் நாயிப் சத்ர் லஜ்னாவாக பொறுப்பு வகித்து வந்தார்கள். அன்னார் மரணிப்பதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முன்னதாக ஹுஸூர் அவர்களைச் சந்திப்பதற்கான நற்பேற்றையும் பெற்றிருந்தார்கள்.

இரவு 8.00 மணிக்கு ஹுஸூர் அவர்கள் வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமஅ செய்து தொழ வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் ஹோட்டலில் உள்ள ஒதுக்குப்புறமான அறைக்கு வருகை தந்தார்கள். அங்கு அயர்லாந்து ஜமாஅத்தின் தேசிய சத்ர் டாக்டர் முஹம்மது அன்வர் மலிக் சாஹிப், அன்ஸாருல்லாஹ் சத்ர் டாக்டர் அலீமுத்தீன் சாஹிப், முபல்லிக் இன்சார்ஜ் அயர்லாந்து இப்ராஹீம் நோனன் சாஹிப் மற்றும் அயர்லாந்து முபல்லிக் ரபீப் அஹ்மது மிர்ஸா சாஹிப் ஆகியோருக்கு துஆவின் வாசகம் மற்றும் தன்னுடைய கையெழுத்திட்ட "The Conference of World Religions" என்ற புத்தகத்தைக் கொடுத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்களின் தங்குமிடமான அடுக்கு மாடிக்குச் சென்று விட்டார்கள்.

### 29 செப்டம்பர் 2014 - திங்கட்கிழமை

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காலை 6.00 மணிக்கு வருகை தந்து ∴பஜ்ர் தொழ வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்களின் தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள். இன்று திட்டமிட்டபடி டப்லினிலிருந்து புறப்பட வேண்டியிருந்தது. டப்லின் ஜமாஅத்தைச் சார்ந்த அன்பர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஹுஸூர் அவர்களுக்கு பிரியா விடை கொடுப்பதற்காக ஹோட்டலுக்கு வெளியே ஒன்று கூடி இருந்தார்கள். காலை 6.20 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஹோட்டலிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் தன்னுடைய கையை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி துஆ செய்தார்கள். பயணக் குழு அங்கிருந்து டப்லின் புறப்பட்டது. 7.00 மணிக்கு துறைமுகம் வந்தடைந்தது. அங்கு VIP Protocol அமைப்பின் மூலமாக துறைமுகத்தின் ஒரு வாகனம் பயணக்குழுவை மெய்காவலரின் பாதுகாப்புடன் பயணக் கப்பலுக்குள் அழைத்துச் சென்றது. இவ்வாறாக பயணக் குழுவின் வாகனங்கள் எல்லாவற்றிற்கும்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 19 November 2020 Issue No. 47

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

முன்பாகவே (Irish Ferries) அயர்லாந்து பயணக் கப்பலுக்குள் ஏற்றப்பட்டது. இந்த அயர்லாந்து பயணக் குழு பயணக் கப்பலின் சிறப்பு Protocol அதிகாரி ஹுஸூர் அவர்களை வரவேற்று ஒரு விசேஷமான குடியிருப்பிற்குள் அழைத்துச் சென்றார்.

12 அடுக்கு மாடியைக் கொண்ட இந்த ஐரிஷ் கடல்சார் கப்பல் தன்னுடைய குறித்த நேரமான 8.00 மணி 10 நிமிடத்தில் டப்லின் துறைமுகத்திலிருந்து பிரிட்டன் துறைமுகமான Holyhead -ற்குப் புறப்பட்டது. இந்தக் கப்பலின் முதல் ஆறு தளங்கள் கார் மற்றும் டிரக் நிறுத்துவதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கின்ற ஆறு மாடிகளில் பயணிகளுக்கான பல Launges, Cafe, Restaurant மற்றும் கடைகளைக் கொண்ட பல கட்டடங்கள் உள்ளன. இந்தக் கப்பலின் அகலம் 250 மீட்டர் ஆகும். இந்தக் கப்பலில் 2000 பயணிகள் பயணம் செய்யலாம். 1342 கார்கள் மற்றும் 250 டிரக்குகள் நிறுத்தலாம். டிரக்குகளை நீக்கி விட்டால் குறைந்தது 1800 கார்களை இந்தக் கப்பலில் ஏற்றலாம். மூன்று மணி நேரம் 50 நிமிட பயணத்திற்குப் பின் 11.35 மணிக்கு கப்பல் பிரிட்டனின் துறைமுகமான Holyhead சென்றடைந்தது. அங்கு சிறப்பு Protocol அமைப்பின் மூலமாக ஹுஸூர் அவர்களின் பயணக்குழுவின் வண்டிகளை எல்லாவற்றிற்கும் முதலாவதாக கப்பலிலிருந்து வெளியேற்றினார்கள். துறைமுகத்தில் வடக்குப் பகுதியைச் சார்ந்த மண்டல அமீர் டாக்டர் நஸீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்பதற்காகக் காத்திருந்தார்கள்.

(பத்ர் வார இதழ் 13 நவம்பர் 2014)

**اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்பது ஒரு நிகரற்றது துஆவாகும். ஒவ்வொரு சிறிய பெரிய தேவை தொடர்பாகவும் மார்க்க, பௌதீக ஒவ்வொரு வேலை தொடர்பாகவும் இந்த துஆவிலிருந்து பயன் பெற முடியும்.**

**اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்பதற்கு விளக்க உரையாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

*“இந்தத் துஆவில் எத்தகைய உயர்ந்த, முழுமையான துஆ கற்றுத் தரப்பட்டுள்ளதென்றால், அதற்கு நிகரானதைக் காண முடியாது. இந்தத் துஆ எந்தக் குறிப்பிட்ட விஷயத்திற்காகவும் அல்ல; மாறாக, ஒவ்வொரு சிறிய, பெரிய, தேவை தொடர்பாக இருக்கிறது. மேலும் மார்க்க, பௌதீக ஒவ்வொரு வேலை தொடர்பாகவும் இந்த துஆவிலிருந்து பலன் பெறலாம்.*

*ஒவ்வொரு வேலைக்கும் - அது மார்க்க விஷயமாக இருந்தாலும், உலக விஷயமாக இருந்தாலும் அதை நிறைவேற்று – வதற்காக ஏதாவதொரு வழிமுறை இருக்கிறது. இந்த வழிமுறையை மேற்கொண்டால் கிடைக்கும்; இல்லையென்றால் கிடைக்காது. பிறகு சில நேரத்தில் ஒரு வேலையைச் செய்வதற்கு பல வழிமுறைகள் தென்படுகின்றன. அவற்றில் சில ஆகுமானவையாக இருப்பதில்லை; சில ஆகுமானவையாக இருக்கின்றன. ஆகுமான வழிகளில் சில குறிக்கோள் வரை சீக்கிரம் கொண்டு சேர்க்கின்றன. சில தாமதமாக கொண்டு சேர்க்கின்றன. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற துஆவில் நமக்குக் கற்றுத் தரப்பட்டிருப்பதாவது, நல்லதும் நன்மையானதுமான வழியை இறைவன் நமக்குக் காட்டித் தருமாறு நாம் அவனிடம் வேண்ட வேண்டும். அதன்படி நடந்து நாம் நமது குறிக்கோளில் வெற்றி பெற வேண்டும்; கூடிய சீக்கிரம் வெற்றி பெற வேண்டும். இந்த துஆ எவ்வளவு எளிதான, எவ்வளவு முழுமையான துஆவாகும்! பிறகு எவ்வளவு பரந்ததாகும்!! நாம் இந்தத் துஆவில் பயன்படுத்த முடியாத உலகின் எந்தக் குறிக்கோள் இருக்கின்றது? எவர் இந்தத் துஆவைச் செய்வதற்கான பழக்கம் கொண்டவராக இருப்பாரோ அவர் எந்தெந்த வகையில் தனது உழைப்பை அதிகமதிகமாக முன்னேற்றம் காண வைக்காதிருப்பார்!*

*ஏனெனில் ஒவ்வொரு குறிக்கோளையும் அடைவதற்கு நல்ல வழியும் இருக்கிறது; தீய வழியும் இருக்கிறது. எனவே எப்போதும் நல்ல வழிமுறையைத் தேடவும், கடைபிடிக்கவும் வேண்டும் என எவருக்கு எல்லா நேரமும் நினைவூட்டப்படுமோ அவருடைய சிந்தனை எந்த அளவுக்கு இந்தப் போதனையைத் தன்னிடத்தில் ஈர்த்துக் கொள்ளும்! எவர் அல்லாஹ்விடம், எனக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக என துஆ செய்வாரோ அவருடைய சிந்தனையும் தானாகவே தாக்கத்திற்குள்ளாகும். மேலும் அவரது முயற்சியும் தமது எல்லா முயற்சிகளிலும் அப்படிப்பட்ட வழியையே தேடுவதில் செலவாகும். மேலும் எவர் தமது வேலைகளில் இந்தக் கொள்கைகளைக் கவனத்தில் கொள்வாரோ அதாவது ஒன்று, எனது எல்லா வேலைகளும் ஆகுமான வழிகளில் இருக்க வேண்டும். இரண்டு, நான் எந்தவோர் இடத்தை அடைந்தாலும் திருப்தி அடைந்து விடக்கூடாது; மாறாக, எல்லையற்ற முன்னேற்றங்களின் விருப்பம் எனது உள்ளத்தில் இருக்க வேண்டும். மூன்று, எனது நேரம் வீணாகக் கூடாது; மாறாக, சிறிதினும் சிறிதான நேரத்திலும் எல்லா வேலைகளையும் செய்து விட வேண்டும். இப்படிப்பட்டவருடைய குறிக்கோளைக் கொண்டவரின் உயர்வு, அவருடைய செயல்களின் சீர்திருத்தம் மற்றும் அவருடைய தொடர்ச்சியான உழைப்பில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?*

*முஸ்லிம்கள் இந்த துஆவைக் கலப்பற்ற தன்மையுடன் வேண்டி வந்தால், அதன் கருத்துக்களை மனதில் கொண்டால், துஆ என்ற முறையில் ஏற்படும் பயன் ஏற்படத்தான் போகிறது. அத்துடன் அதன் விளைவு இயல்பான முறையில் முஸ்லிம்களின் சிந்தனையில் ஏற்படுவதும் குறைந்த மதிப்புடையதல்ல என்று நான் கருதுகிறேன்.*

*(தஃப்ஸீரே கபீர் தொகுதி 1 பக்கம் 32 காதியான் பதிப்பு 2010)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad